Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 | தேசிய தினசரி | மலர் 14
போன் 389 | | இதழ் 109

யாழ்ப்பாணம் வைகாசி 16 றபி; ஆகிர் 15 திங்கட்கிழமை (29-5-72)

29 MAY 1972
UNIVERSITY LIBRARY

நவநாகரீக நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்
ஹீரான் ஜுவலலர்ஸ்
போன் 444
தந்தி 'இரத்தினம்ஸ்'
50. கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

## சர்வதேச தபால்தந்தி பரிவர்த்தனைகளில்

# 'இலங்கை' என்ற சொல் தொடர்ந்து இருக்குமா?

## தபால் அமைச்சு ஆராய்கிறது

கொழும்பு, ஞாயிறு

சர்வதேச தபால் தந்திப் பரிவர்த்தனைகளில் சிறிலங்கா குடியரசை தொடர்ந்தும் இலங்கை என்றும் குறிப்பிடுவதா இல்லையா என்று தபால்தந்தி போக்குவரத்து அமைச்சு ஆராய்ந்து வருவதாக அறியப்படுகின்றது.

இது சம்பந்தமாக விளக்கம் தரும்படி அரசியல் சட்ட விவகாரங்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவிடம் தபால் அமைச்சு கோரியுள்ளதாம்.

இதுவரைகாலமும் இந்நாட்டின் பெயர் அதிகாரப் பூர்வமாக இலங்கை என்றே குறிக்கப்பட்டு வந்திருப்பதால் சர்வதேசத் தொடர்புகள் தந்திகள் தபால் கடிதங்கள் போன்றவற்றிற்கும் இலங்கை என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இச்சொல் சிறிலங்கா குடியரசு என மாற்றப்படுவதால் வருமானத்தில் ஓரளவு நஷ்டம் ஏற்படக்கூடுமானால் சிரமங்களை எதிர் நோக்கவேண்டியிருக்கும் என்று கருதப்படுகின்றது.

பெயர் மாற்றப்படுவதாயின் சர்வதேச தபால் சங்கம் சர்வதேச தந்தித் தொடர்பு சங்கம், ஏனைய வெளி தந்தித்தொடர்பு சபை போன்றவற்றுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். அவை ஏனைய ஸ்தாபனங்களுக்கும் அறிவித்து உலகம் முழுவதும் இப்பெயர் பரவலாக்கப்படும். இதற்கான சகல செலவுகளையும் இலங்கையே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

### றிவிரெஸ செய்தி

தபால் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள குடியரசு தின ஞாபகார்த்த 15 சதமுத்திரையில் சிறிலங்கா என்பது தமிழில் இலங்கை என்று குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி நேற்றைய 'றிவிரெஸ' பத்திரிகை கட்டுரை ஒன்றை பிரசுரித்துள்ளது. எமது சிறிலங்கா குடியரசு இலங்கையா? என்று தமிழ் எழுத்துக்களையும் சுட்டிக்காட்டி அச் செய்திக்கு தலைப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் குடியரசுக்குள்ள சமஷ்டி முறையில் அரசியல் மாற்றும் அதிகாரிகள் சிலர் தபால் இலாகாவில் இருக்கிறார்கள் என்பதுமிகத் தெளிவாகவிளங்குகிறதென அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுயுகம் ஒன்று என்பதை முழுமுகப்புடன் வெளியிடப்பட வேண்டியிருந்த இந்த முத்திரை வெறும்கடமைபோன்று வெளியிடப்பட்டிருப்பதாக இருகண்ணுள்ள எவருக்கும் தெரிகின்றதாம்.

ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட்டதைக் குறிக்கும் விதத்தில் வெளியிடப்பட்ட இந்த முத்திரையில் பழைய அரச சின்னத்தையே சித்திர நிகழ்ச்சியைக் குறிக்கும். இந்த முக்கிய விஷயத்தில் கையாளப்பட்டதின் மூலம் இந்த புனித சரித்திரத்துக்காக இரவுபகலாகப் பணிபுரிந்த பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட அரசாங்கத்தையே கேலி செய்வதாகும் என்று அக்கட்டுரை கூறுகின்றது.

முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ள படத்தையும் கண்டித்துள்ளதுடன், முத்திரையில் தமிழிலும் சிங்களத்திலும் குடியரசு என்பதைக் குறிப்பிட்டிருக்கும் அதே வேளையில் ஆங்கிலத்தில் குறிக்காததைக் கண்டித்துள்ளது. முத்திரையில் இந்நாட்டின் பெயர் தமிழில் இலங்கை என்று குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து ஒரு நிருபர் ஒருவரிடமிருந்து வந்ததாக பின்வரும் செய்தியும் கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளது.

குடியரசின் அங்கீகரிக்கப்பட்ட பெயர் சிறிலங்காவா

(5-ம் பக்கம் பார்க்க)

## பதுக்கல் வேட்டை மோசடிகள் அம்பலம்!

கொழும்பு, ஞாயிறு

பொதுமக்களுக்குத்தேவையான அத்தியாவசிய பொருட்களை பதுக்கி மோசடி செய்யும் வர்த்தகர்கள் நூற்றுக்கணக்கானோர் விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்தின் திடீர் வேட்டைகளில் அகப்பட்டு வருகிறார்கள்.

இவ்வருடம், முதல்மூன்று மாதங்களில் 875 திடீர் பரிசோதனைகளை விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு நடாத்தியிருக்கிறது. கொழும்பில் 170 திடீர்வேட்டைகள் நடாத்தப்பட்டன.

துணியும், கன்னங்கியின் பொருட்களை விற்றும் விலைப் பட்டியல் மாற்றியும் வியாபாரம் செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டனர்.

290 வழக்குகளில் தீர்ப்புகளும் வழங்கப்பட்டன. 23 ஆயிரம் ரூபாய் அபராதம் இவர்களுக்கு விதிக்கப்பட்டது. இந்தத் தொகை அரசாங்கத்தின் பொது மக்களுக்கான உதவியுடன் சேர்க்கப்படும்.

### மாஸ்கோ தேவாலயத்துக்கு நிக்ஸன் தம்பதிகள்

மாஸ்கோ, மே. 28

அமெரிக்க ஜனாதிபதி திரு. றிச்சர்ட் நிக்ஸன் மாஸ்கோவிலுள்ள தேவாலயத்துக்கு விஜயம் செய்தார். இவருடன் இவரது துணைவியார் திருமதி நிக்ஸனும் தேவாலயத்துக்குச் சென்று பிரார்த்தனை செய்தார்.

## காதலுக்காக முடிதுறந்த வின்சர் கோமகன் மறைவு

பாரிஸ், மே. 28

இங்கிலாந்தின் மன்னராக 10 மாதகாலம் ஆட்சி புரிந்தவரும் காதலுக்காக முடி துறந்து பரபரப்பை ஏற்படுத்தியவருமான வின்சர் கோமகன் எட்டாவது எட்வேர்ட் இன்று அதிகாலையில் காலமானார்.

5-ம் ஜோர்ஜ் மன்னரின் மூத்த புதல்வரான வின்சர் கோமகன் 1936-ம் ஆண்டு பட்டத்துக்கு வந்தார். பொதுமக்களுடன் மிக சகஜமாகப் பழக ஆரம்பித்த இவர் கூவர் பீடத்தவர்களின் வெறுப்புகளுக்கு ஆளானார். அமெரிக்கரான சிம்சன் சிமாட்டியைக் காதலித்ததின் மூலம் முடியைக் கைதுறக்கவேண்டியதாக ஏற்பட்டது. காதலியைவிட முடி பெரிதல்ல வென்று கூறி அரசப்பதவியைத் துறந்து சிம்சன் சிமாட்டியுடன் போய் வாழ்ந்துவந்தார்.

வேல்ஸ் இளவரசராக இருந்தபொழுது இவர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் விஜயம் செய்தார்.

இங்கிலாந்தின் இப்போதைய மகாராணி எலிஸபெத்தின் பெரிய தகப்பனுமான எட்டாவது எட்வேர்ட் கடைசிக்காலத்தில் பாரிஸில் தமது இல்லத்தில் வாழ்ந்து வந்தார். சுகவீனமுற்றிருந்த அவரை சமீபத்தில் பிரான்சுக்குச் சென்றிருந்த எலிசபெத் மகாராணி போய்ப் பார்த்தார். வின்சர் கோமகன் காலமானபோது அவருக்கு வயது 77.

### இந்திய—சீன வர்த்தகம்

புதுடில்லி, மே 28

இந்தியாவுக்கும்-சீனாவுக்குமிடையே 1962ம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினை அடுத்து இவ்விரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் துண்டிக்கப்பட்டது. இதனை நீக்கி மீண்டும் இவ்விரு நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று இந்தியா சீனாவுக்கு யோசனை கூறியுள்ளதென்றும் ஆனால் இதற்கு சீனா பதில் எதையும் அனுப்பவில்லையென்றும் உதவி வெளிநாட்டு மந்திரி திரு. சுரேந்திர பால்சிங் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

### தபால்பெட்டியுள் தேன்கூடு

இரணை இலுப்பைக்குளம், ஞாயிறு

கமடு முதலாம் யூனிட் தபால் கந்தோரிலுள்ள தபால் பெட்டியினுள் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலாக தேன்கூடு காணப்படுகின்றது. இது பற்றி தபாலதிபரிடம் முறையிட்டபோது கடிதங்களை நேரடியாகத் தம்மிடம் கையளிக்கும்படி தபாலதிபர் கூறியுள்ளாராம்: இதனால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினருக்குசெலவுப்படி

கொழும்பு ஞாயிறு

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு செலவுப்படி ஒன்றை வழங்குவது பற்றி உள்ளூராட்சி அமைச்சர் ஆலோசித்துவருகின்றார்.

இதனை நடைமுறை சாத்தியமாக்குவதற்கான ஒரு மசோதாவை உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விரைவில் தேசிய சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கவிருக்கிறார். இதன்மூலம் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மக்கள் பணிசெய்வதற்கு மேலும் வசதி பிறக்குமென்று அமைச்சர் எதிர்பார்க்கின்றார். மேயர் பதவி வகிப்பவர்களுக்கு மாதம் 750 ரூபாவும் நகரசபைத் தலைவர்களுக்கு 500 ரூபாவும் வழங்குவதற்கும் ஏனைய சபைத் தலைவர்களுக்கு மாதம் 250 ரூபா விதம் கொடுப்பதற்கும் அமைச்சர் ஆலோசனை தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

# 'முத்தமிழுக்கு விழா எடுப்பது தமிழர் பண்பாடு'

குடிநகர், ஞாயிறு

"மூவேந்தர்கள்" காலம் தொடக்கம் முத்தமிழுக்கு விழா எடுத்து வந்திருக்கின்றனர் தமிழர்கள். முத்தமிழ்க் தமிழர்களின் பரம்பரைச் சொத்தாகும். தமிழ் மக்களின் கலை கலாச்சாரங்களை பாதுகாக்கும் பொறுப்பு தமிழர்களின் தலையாய கடமை. இந்தக் கடமையை பண்டைய தமிழ் அரசர்களும் செய்து வந்திருக்கின்றனர். முத்தமிழுக்கும் விழா எடுப்பது தமிழர்களது பண்பாடு என்றும் கூறலாம்.

இவ்வாறு பண்டைதீவு உதய சூரியன் சன சமூக நிலைய முன்றலில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் தபால் தந்தி அத்தியட்சகர் திரு. எம். நடராசா கூறினார்.

பண்டிதர், சைவப்புலவர் வி. நாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இப்படியான விழாக்களை நாம் எடுப்பதன் மூலம் தமிழர்களின் பண்டைய இலக்கியங்களும் கலாச்சாரங்களும் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல எமது வளர்ந்து வரும் சமுதாயத்தையும் நாம் இத்துறையில் பயிற்றுவிக்கவும் இவ் விழாக்கள் உதவுகின்றன. தமிழ்க்கலை கலாச்சார இலக்கியத்துறையில் எமது மக்கள் நல்ல தேர்ச்சியும் திறமையும் அடைய வேண்டும். எமது மக்கள் மத்தியில் இலக்கிய எழுத்தாளர்கள் வளர வேண்டிய அவசியம் ஏற்பட்டு வருகின்றது.

## மிளகாய்த்தூள் வீசிக் கொள்ளை

கதிர்காமம், திங்கள்

காரில் சென்றவர்களின் முகத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்டு அவர்களிடமிருந்த கைக்கடிகாரங்கள் பறித்தெடுக்கப்பட்டனவாம்.

தனியார் காரொன்றில் கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் நில்லை எனுமிடத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. காரில் சென்றவர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களது பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விசாரணை நடத்திய பொலிசார் நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன் மேலும் மூவரைத் தேடி வருகின்றனர் எனவும் தெரிகிறது.

## பசுமாடு வெட்டிய நால்வர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக பசுமாடுகளை வெட்டிய நால்வரை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய திடீர் பரிசோதனைக்குழு பொறுப்பதிகாரி சிவசம்பு தவலிங்கம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கைது செய்தது.

யாழ்ப்பாணம் எம். ஓ லேனிலும் ஆஸ்பத்திரி வீதியிலும் நேலவிக்குளத்திலும் பசுமாடுகளை சந்தேகநபர்கள் வெட்டிக்கொண்டிருக்கும்போது பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து பொலிஸார் அவர்களைக் கைதுசெய்தனர்.

இவர்கள் மீது யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஆசிரியருக்கு கடிதம்

## யானைகள் அட்டகாசம்

கனகாம்பிகைக்குளம் குடியேற்றத்திட்டத்தில் சென்ற ஒரு மாதமாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. தினமும் இரவு நேரங்களில் தோட்டங்களில் புகுந்து பயிர்களை அழித்து நாசம் செய்கிறது.

அண்மையில் கண்டி வீதி 156-ம் கட்டையில் உள்ள பாதையால் தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்த சிலரை யானை தாக்க முயன்றபோது தெய்வாதீனமாக அவர்கள் தப்பிவிட்டார்கள். ஆனால் அவர்கள் கொண்டுசென்ற சைக்கிளை மிதித்து நாசம் செய்து விட்டது. அரசாங்கம் விவசாயிகளின் உயிரிலும் பார்க்க யானையை மேலாக மதித்து வருகிறது. விவசாயிகள் பலதடவைகள் மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தும் எதுவிதமான நடவடிக்கையும் இல்லை. விவசாயிகள் தோட்டங்களில் இருக்க முடியாத நிலை வந்துவிட்டது.

கா. சி. நடராசா

23, கனகாம்பிகைக் குளத்திட்டம்,
கிளிநொச்சி.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை ஐக்கிய கழகம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டு கழகங்களிடையே பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் உதைபந்தாட்டப் போட்டிகள் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றன.

கரப்பந்தாட்டம், மென்பந்தாட்டம் ஆகியனவும் மேற்படி கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன

— [தே. தி]

## வெற்றி

பருத்தித்துறை, ஞாயிறு

கிளிநொச்சி விளையாட்டுக் கழக ஆதரவில் நடைபெறும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கரைச்சி விளையாட்டுக் கழகம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன கோஷ்டியை வென்றது. திரு எஸ். ஏகநாயக்க மத்தியஸ்தம் வகித்தார்.


## நன்றி நவிலல்

25-5-72 வியாழக்கிழமையன்று நடைபெற்ற திருமதி தெய்வானைப்பிள்ளை திருஞானசம்பந்தரின் மரணச் சடங்கிற்கு நேரில் வருகைதந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் தங்கள் ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொண்ட அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருஞானசம்பந்தர் குடும்பத்தினர்

காளியம்மன் வீதி
திருநெல்வேலி தெற்கு. 4168


## மாபெரும்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தையும், அமைதியும் அடக்க முழுவதுமாகக் காணப்பட்டார். "சித்தார்த்தன்" என்றால் தன் குறிக்கோளை அடைபவன் என்பது பொருள். இவருடைய ஆழ்ந்த சிந்திக்கும் தன்மையும் எல்லையில்லாக் கருணையும், அரண்மனையின் நிலையற்ற இன்பங்களை அனுபவிப்பதற்குத் தடையாயிருந்தன.

மைந்தன் உலகம் புகழும் ஒரு சக்கரவர்த்தியாக வேண்டுமெனத் தந்தை கனவு கண்டார். துன்பத்தின் நிழல்கூட சித்தார்த்தன் பக்கம் எட்டியும் பார்க்காதவகையில் இன்பமே நிறைந்த எழில்மிக்க சூழலில் பிணியாளரையும் பிணங்களையும் துறவிகளையும் காணாவாறாக வளர்க்கப்பட்டார். குளிர், மழை, வெப்பகாலங்களில் வசிக்க அவருக்கு 'ரம்ய' 'சுரம்ய' 'சுப' என்று மூன்று மாளிகைகளைத் தந்தை கட்டிக்கொடுத்தார். பாண்டித்தியமிக்க பண்டிதர்களினால் கல்வி கலை முதலிய சாஸ்திரங்கள் அளிக்கப்பட்டன. யசோதரா என்ற அரசகுமாரியை சித்தார்த்தன் கைப்பிடித்தார். மணநாளிலிருந்து பதின்மூன்று ஆண்டுகள் அரசசுக போகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் துன்பத்தில் உழலும் நான்கு மனிதர்களைக் காண்கின்றார். கண்டதும் அவர் சிந்தனை வேகமடைகிறது. துறவு பூணுவதற்கு சங்கற்பம் செய்துகொள்கிறார். ஆனால் எதிர்பாராத செய்தி பொன்று கிடைத்தது. ராகுலனின் ஜனனம்தான் அது.

அன்றிரவும் அவரைத் திருப்திப்படுத்து முகமாக நாட்டியங்களும் ஆடல் பாடல்களும் இடம்பெற்றன. இவைகள்யாவும் அவரின் வெறுப்பை அதிகரித்தன. இன்றே இல்லறவாழ்வைத் துறக்கின்றேன் என மனதில் திடப்படுத்திக்கொண்டார். தன் மகன் இராகுலனை ஒரேஒரு தடவை பார்த்துவிட்டு இவ்வுலக வாழ்க்கை அரசகாரியங்கள் நிலையற்றது என்று உணர்ந்து அழகே உருவான மனைவியையும் சிந்தைக்கினிய செல்லக்குமாரனையும் தனது இருபத்தொன்பது வயதிலேயே துறந்து உண்மைப்பொருளைத் தேடி பயணத்தை ஆரம்பித்தார் சித்தார்த்தன்.

பல இந்து மத ஆசாரியர்களிடமிருந்து ஆராய்ந்தும் உடலை வருத்தியும் உண்மைப்பொருள் காணும் பாதையில் வெற்றிகாணாது ஈற்றில் அரசமர நிழலில் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்த சித்தார்த்தன் எந்தவித தெய்வீக சக்தியின் வழியாகவோ உதவியோ இல்லாமல் சுயமுயற்சியால் ஞானத்தினால் தம்மைப் பரிசுத்தமாக்கிக் கொண்டார். தமது முப்பத்தைந்தாவது வயதில் எவராலும் இலகுவில் அடையமுடியாத பரிபூரண ஞானம் உதிக்கப்பெற்ற ஒரு புத்தரானார்.

## வருடாந்தப் போட்டி

கல்வியங்காடு, ஞாயிறு

நல்லூர் சைவ சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டியை யூன் மாதம் 19-ந் திகதி மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது.

## உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 3-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 12-ந் திகதி தேர்த்திருவிழாவும் 13-ந் திகதி தீர்த்தமும் இடம்பெறும். மறுநாள் நடைபெறவுள்ள பூங்காவனத்துடன் விழா முடிவடையும்.

# விவசாய உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்க முயற்சி

கொழும்பு, ஞாயிறு

மாவட்டங்கள் தோறும் விவசாயிகளுக்குத் தேவையான பொருட்கள் என்னென்னவென்று அறிந்து அவைகள் காலதாமதமின்றி அவர்களுக்கு கிடைப்பதின் மூலம் நாட்டின் விவசாய உற்பத்திகளைப் பெருக்கும் புதிய திட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி 1972-73ம் ஆண்டுக்கான செயல்திட்டம்பற்றி விவசாய அமைச்சு அதிகாரிகள் மாவட்டங்கள் தோறும் சென்று அரசாங்க அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியவர்களோடு ஆலோசனைகள் நடத்தியிருக்கிறார்கள்.

மிளகாய் இறக்குமதியையும் வெங்காய இறக்குமதியையும் முற்றாக தடைசெய்துள்ள நிலையில் இந்தப் பொருட்களைப் பெருவாரியாகப் பயிரிட்டு உற்பத்தி செய்யும் விடயமாக அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1974-ம் ஆண்டுகளில் நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டுமென எதிர்பார்க்கப்படுவதால் நெற்சாகுபடி விஷயத்திலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தெரிகின்றது.

விவசாயிகளுக்கு பசளைகள் விதைப்பயிர் போன்றவை வசதியாகக் கிடைப்பது குறித்தும் நீர்ப்பாசன வசதிகள் பற்றியும் கிராமங்கள் வாரியாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

தெங்குஉற்பத்தியாளர்களுக்கு மாத்திரமின்றி இதரப்பயிர்கள் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் கடனுதவிகள் செய்து கொடுப்பது பற்றியும் அதிகாரிகள் விசேஷமாக ஆராய்வார்கள் என்று தெரிகின்றது.

# வற்றாப்பளை கண்ணகை இன்று பொங்கல்

இரா. பத்மநாதன் —

கற்பின் செல்வி கண்ணகியை தெய்வமெனமதித்த சேரன் செங்குட்டுவன் சிலை செய்தான், மக்களும் கண்ணகியின் பெருமையை மதித்தனர். ஈழநாட்டிலே கண்ணகி வழிபாடு கயவாகு வேந்தனால் பரவப்பட்டது. இதன்பின் இலங்கையில் கண்ணகி பத்துத்தலங்களில் காட்சிகொடுத்து வந்தாள். பத்தாவது இடமாக வன்னி நாட்டின் கரையோரமாகிய முல்லைத்தீவுப்பகுதியில் கோயில் கொண்டருளினாள் என சரித்திரம் கூறுகின்றது. பத்தாம் இடமதில் கண்ணகி கோயில் கொண்டமையால் அக்கரையோர கிராமம் பத்தாப்பளை என வழங்கிற்று. காலப்போக்கில் இன்று வற்றாப்பளையானது.

இவ்வாலயம் சிறப்புமாக இலங்கையில் மூன்றாவது பெரிய ஆலயமாக திகழ்கின்றது.

வன்னிநாட்டின் காவல் தெய்வமாகவே அம்மாள் இருந்தருள் பாலித்தாள் என்று பண்டார வன்னியன் வரலாறு கூறுகின்றது. இலங்கையில் அன்று இருந்த அத்தனை அரசர்களும் கண்ணகி வழிபாடு செய்து விசுவாசம் செலுத்தியுள்ளனர். அந்நியர் காலடி வைத்த இலங்கையில் இந்துக் கோயில்களை இடித்து வரும் சமயம் அம்பாளின் கோவிலையும் இடிக்கும்நோக்கத்தோடு அவர்கள் ஆலயத்தைச் சென்றடைந்தபோது அம்பாள் கோபமிகுதியால் ஆலய முன்றலில் நின்ற பனிச்சமரக்காய்களால் அப்படைகளை ஓட ஓட விரட்டியடித்ததாக ஆலய வரலாறு கூறுவோர் செப்புகின்றனர். அதுமட்டுமன்றி ஆண்டுதோறும் வைகாசிப் பௌர்ணமியை அடுத்துவரும் திங்களில் வருவேன் என்று அசரீரி ஒன்று தோன்றியமையால் இத்தினத்தில் ஆண்டுதோறும் பொங்கல்விழாவை கொண்டாடுகின்றனர். அன்று நடக்கும் பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக முல்லைத்தீவுக் கடலின் உப்புநீரை பூசாரியார் குடம் கொண்டு நிரப்பிவந்து அந்நீரையே பொங்கல்நாள் முழுவதும் அம்பாளின் மூலஸ்தானத்திலே தெய்வீக ஊற்றி எரிப்பார்கள். இது ஒன்றுமட்டும் அம்பாளின் அருட்பெருமையை காட்டப் போதுமானது.

ஆண்டுதோறும் வைகாசியில் நடைபெறும் இப்பொங்கல்விழாவுக்கு ஈழநாட்டின் நாலாபகுதியிலும் உள்ள மக்கள் வந்து எதுவித வேறுபாடுமின்றி வணங்கிச் செல்லுகின்றனர். பெரும்பாலும் யாத்திரைகளின் வருகையின் தொகையே கூடுதலாக இருக்கும். அம்பாளின் பொங்கல்விழா கழிந்தாலும் அன்றைய தினம் பெரும் வாணிப சந்தை நாளாகவே இருக்கும். அம்பாளின் அருட்பெருக்கைப் பெற அன்றுகூடும் பக்தர்கள்கூட்டம் வேறு என்றுமே வன்னிநாட்டில் கூடுவதில்லை.

## இலங்கை—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கும். "சிறிலங்கா" என்றே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் முத்திரையில் பொறிப்பதற்கு முன்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. என்றாலும் தமிழ் இனத்தவரின் 'சிறீ' விரோத சக்திகள் கடுமையாக செயல்பட்டதின் விளைவாக 'சிறி' மாத்திரமல்ல, லங்கா என்பதுகூட தாக்கி எறியப்பட்டு 'இலங்கை' என்பது மாத்திரமே மிஞ்சியிருக்கின்றது. இதன்படி நாம் உருவாக்கியுள்ளது சிறிலங்கா குடியரசு அல்ல இலங்கை குடியரசுதான்."

பல்லாண்டுகளுக்குப் பின்னர் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்த மங்களகரமான சந்தர்ப்பத்திலேகூட தேசவிரோத நாசவேலைசெய்யு சக்தியுடைய மக்கள் விரோதிகளை செவியில் பிடித்து வெளியில் வீசுவதற்கு பிரதம மந்திரிக்கு சக்திபேற்பட வேண்டும் என்பது மக்கள் ஆசையாகும் எனக் கட்டுரை முடிகின்றது.

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதியில் உள்ள சிறுமிகளுக்கு இலவச சங்கீத வகுப்பொன்றை நடாத்த வதிரி திரு இருதயக் கல்லூரி ஆசிரியை சங்கீதபூஷணம் திருமதி ராஜம் மரியாம்பிள்ளை முன்வந்துள்ளார். சிறிது காலத்தின் பின் நடனம், வாத்தியம் இசை ஆகியன வற்றிலும் பயிற்சி அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

